# கதைக் கொத்து

## ஐந்தாம் வகுப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# கதைக் கோத்து

ஐந்தாம் வகுப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை - 600 031.

© தமிழ்நாட்டு அரசு
முதற் பதிப்பு—1980

ஆசிரியர் :
புலவர் **தணிகை உலகநாதன்,**
துணைத் தலைமையாசிரியர்,
இந்து தியாலாஜிகல் மேல்நிலைப்பள்ளி,
தங்கசாலைத் தெரு,
சென்னை-600 001.

**விலை ரூ. 1-20**

மேலாய்வாளர் :
புலவர் **முத்து. சடையப்பன்,** எம்.ஏ.,பி.டி.,
தலைமையாசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
சேரன்மகாதேவி,
திருநெல்வேலி மாவட்டம்.

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி.எஸ்.எம். தாளில் இந்நூல் அச்சிடப் பட்டுள்ளது.

புலவர் **கோ. கணபதி,**
தமிழாசிரியர்,
தியாகராயர் மேல்நிலைப்பள்ளி,
சென்னை-600 017.

ஆஃப்செட் முறையில் அச்சிட்டோர் :
பூர்ணமாலா பிரஸ்ஸ்,
சிவகாசி-626123.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எலி வேட்டை | ... | 5 |
| 2. | மைனாவும் முயலும் | ... | 9 |
| 3. | ஏட்டுச் சுரைக்காய் | ... | 12 |
| 4. | நரியும் நண்டும் | ... | 16 |
| 5. | புத்தரும் சிறுவனும் | ... | 20 |
| 6. | உண்மை எது? போலி எது? | ... | 24 |
| 7. | பொறுமையுள்ள வேலையாள் | ... | 28 |
| 8. | பூனைக்கு மணிகட்டுபவர் யார்? | ... | 31 |
| 9. | வரப்புயர.... ! | ... | 34 |
| 10. | தொட்டதெல்லாம் பொன் | ... | 37 |
| 11. | மனக்குரல் ! | ... | 40 |
| 12. | ஆபுத்திரன் | ... | 45 |

# 1. எலி வேட்டை

**எ**லியூர் என்னும் ஊர் ஒன்று இருந்தது. எலிகள் அங்கு ஏராளமாக வாழ்ந்தன. அதனால்தான் அந்த ஊருக்கு அப் பெயர் வந்தது. அந்த ஊரில் வாழ்ந்த எலிகள் மிகவும் பொல்லாதவை. அவை வீடுகள், சத்திரங்கள், கோயில்கள், குடிசைகள் முதலிய எல்லா இடங்களிலும் குடியிருந்தன.

அந்தப் பொல்லாத எலிகள், வீட்டில் உள்ள பானைகளை உருட்டும்; பண்டங்களைக் கடிக்கும்; கட்டடங்களை அழிக்கும்; பட்டுத் துணிகளையும் கிழிக்கும்; பட்டப்பகலிலும் அஞ்சாமல் திரியும்.

எலிகளின் தொல்லைகளை ஊர் மக்களால் தாங்கமுடியவில்லை. அவர்கள் அனைவரும் ஒன்றுகூடிக் கிராமத் தலைவரிடம் சென்று முறையிட்டார்கள். எலிகளின் தொல்லையை உடனே போக்காவிட்டால் அனைவரும் வேற்றூருக்குப் போவதே நல்லது என்று கூறினார்கள். ஊர்த் தலைவர் அவ்வூரில் உள்ள பெரிய மனிதர்களை அழைத்து எலிகளைப் போக்கும் வழிகளைப்பற்றிக் கலந்து பேசினார். அப்போது எவரோ ஒருவர் புல்லாங்குழல் ஊதும் இனிய ஒலி கேட்டது. அந்தப் பக்கமாகப் புல்லாங்குழலை ஊதிக்கொண்டே சித்தர் ஒருவர் வந்தார்.

ஊர்த் தலைவர் சித்தரை முகம் மலர இன்மொழி பேசி வரவேற்று உபசரித்தார். பின்னர் அவரை நோக்கி, ''நீங்கள் யார்? இங்கு வந்த காரணம் யாது?'' என்று கேட்டார்.

**சித்தர் :** ஐயா! நான் ஒரு குழல் சித்தன். எல்லா ஊரும் என் ஊரே; எல்லாரும் என் உறவினரே! ஆங்காங்கே மக்கள் படும் துன்பங்களைப் போக்குவதே என் வேலை.

**தலைவர் :** அப்படியா? ஐயனே! சரியான சமயத்தில் நீங்கள் எங்கள் ஊருக்கு வந்துள்ளீர்கள். இந்த ஊரில் இருக்கும் பொல்லாத எலிகளால் நாங்கள் படும் தொல்லைகளுக்கு அளவே இல்லை.

**சித்தர் :** தலைவரே! நான் என் புல்லாங்குழலின் ஆற்றலால் எல்லாவிதமான செயல்களையும் செய்துமுடிப்பேன். குடந்தையில் இருந்த கொசுக்களை ஒழித்தேன்! கோட்டையூரிலிருந்த மூட்டைப் பூச்சிகளை அழித்தேன்! நெட்டூரிலிருந்த வெட்டுக்கிளிகளை விரட்டினேன்! இந்த எலிகள் எனக்கு எம்மாத்திரம்?

**தலைவர் :** எங்கள் ஊரில் உள்ள எலிகளை அழித்தால் உங்களுக்கு ஐயாயிரம் பொன் பரிசாகக் கொடுப்போம்.

**சித்தர் :** ஐயாயிரம் எதற்கு? ஆயிரம் பொன்னே போதும். நாளைக் காலைக்குள் என் திறமையைப் பார்க்கலாம்.

**தலைவர் :** நல்லது சித்தரே! உங்களுக்குப் புண்ணியம் உண்டு. எலிகளை ஒழித்தால் உங்கள் விருப்பப்படியே ஆயிரம் பொன் கிடைக்கும்.

இவ்வாறு இருவரும் ஒப்புக்கொண்ட பின்னர்க் கூட்டம் கலைந்தது.

மறுநாள் பொழுது விடியும் நேரம். குழல் சித்தர் புல்லாங்குழலை எடுத்து ஊதினார். ஊரில் இருந்த எலிகள் எல்லாம் வெளியே வந்து குழல் சித்தரைப் பின்தொடர்ந்தன. சித்தர் குழல் ஊதிக்கொண்டே தெருவழியாகச் சென்றார். வெள்ளை எலி, கறுப்பு எலி, சுண்டெலி, குண்டெலி, வயல் எலி எல்லாம் சித்தரின் பின்னே ஊர்வலமாகச் சென்றன. குழல் சித்தர் முடிவில் என்ன செய்தார் தெரியுமா? குழலை ஊதிக்கொண்டே ஓர் ஆற்றில் இறங்கினார். எலிகள் எல்லாம் அவர் பின்னால் ஆற்றில் குதித்தன. அவை வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டன. ஊரில் இருந்த எலித் தொல்லை நீங்கியது. மக்கள் அனைவரும் குழல் சித்தரை மனமாரப் பாராட்டி நன்றி கூறினார்கள்.

பின்னர்க் குழல் சித்தர் ஊர்த் தலைவரிடம் சென்று தமக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் பொன்னைத் தருமாறு கேட்டார். ''இந்தச் சிறிய வேலைக்கு ஆயிரம் பொன்னா? ஐந்து பொன்தான் கொடுப்பேன். விருப்பமானால் வாங்கிக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் செல்லுங்கள்'' என்று கூறினார் ஊர்த் தலைவர்.

தலைவரின் பேச்சைக் கேட்ட குழல் சித்தர் ஆத்திரம்கொண்டு, ''என்ன ஐயா இது? காரியம் முடியவேண்டுமானால் காலைப் பிடிப்பது! காரியம் முடிந்தால் கழுத்தைப் பிடிப்பதா? அதற்குள்ளாக நன்றி மறந்துவிட்டீர்களே!'' என்று கூறினார். தலைவர், ''சித்தரே! வீண்பேச்சு எதற்கு? உங்களுக்குச் சம்மதமானால் ஐந்து பொன் பெற்றுக்கொள்ளுங்கள். இல்லையேல் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்'' என்று கூறினார்.

சித்தர், ''ஊர்த் தலைவரே! சொன்ன சொல்லை மீறிவிட்டீர். இனி, உமது முகத்தில் விழிப்பதும் பாவம்! இந்த நன்றிகெட்ட செயலுக்கு நாளை சரியான பாடம் புகட்டுவேன். நான் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டு கோபத்துடன் வெளியே புறப்பட்டார்.

அடுத்த நாளும் சித்தர் முன்போலவே புல்லாங்குழலை எடுத்து ஊதினார். ஊரில் உள்ள குழந்தைகள் எல்லாரும் வீட்டைவிட்டு வெளியேறினார்கள்; குழல் சித்தரின் பின்னால் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் சென்றார்கள். அவர்களுடன் ஊர்த் தலைவரின் குழந்தைகளும் போனார்

கள். எலியூர் மக்கள் எல்லாரும் தங்கள் குழந்தைகளைக் காணாமல் வருந்தினார்கள். குழல் சித்தர் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் ஒரு குகையில் அடைத்து வேண்டிய தின்பண்டங்களைக் கொடுத்தார்.

பெற்றோர்கள் ஊர்த் தலைவரிடம் சென்று, ''ஐயா! ஊர்க் குழந்தைகளை எல்லாம் சித்தர் அழைத்துக் கொண்டுபோய் ஒரு குகையில் அடைத்து விட்டார். குழந்தைகளைச் சித்தரிடமிருந்து நீங்கள் மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

தம் வீட்டுக் குழந்தைகளும் காணாமற்போனதை அறிந்த தலைவரின் உள்ளம் திடுக்கிட்டது. உடனே சித்தர் தங்கியிருந்த குகைக்குச் சென்றார். ''ஐயா, சித்தரே! உங்கள் ஆற்றலை உணராமல் தவறு செய்து விட்டேன். எனக்குப் புத்திவந்தது! என்னை மன்னிக்கவேண்டும். இதோ, உங்கள் ஆயிரம் பொன். பெற்றுக்கொண்டு எங்களின் குழந்தைகளை விட்டு விடுங்கள்'' என்று வேண்டினார்.

சித்தர் ஊர்த் தலைவரை நோக்கி, ''ஊர்த் தலைவரே! நன்றி கெட்ட உங்களுக்கு இப்போதாவது புத்திவந்ததே! அதுவே போதும். குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். இந்த ஆயிரம் பொன்னும் எனக்கு வேண்டுவதில்லை. உங்களுக்கே திருப்பித் தருகிறேன். இந்தப் பணத்தைக்கொண்டு ஊருக்கு வேண்டிய பொது நன்மைகளைச் செய்து கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன்'' என்றார்.

ஊர்த் தலைவர் குழல் சித்தரின் அன்பைப் பாராட்டினார். அவர் செய்த உதவிக்கு நன்றி கூறினார். அந்த ஊருக்கு, எலியூர் என்னும் பெயரை மாற்றிச் சித்தர்புரி என்று பெயர் வைத்தார். ஊர் மக்கள் சித்தரின் செயலை எண்ணி எண்ணி வியப்படைந்தார்கள்.

''நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை.''

—கொன்றைவேந்தன்

# 2. மைனாவும் முயலும்

பண்டைக் காலத்தில் யமுனை ஆற்றங்கரையில் ஒரு சோலை இருந்தது. அங்கு இருந்த ஒரு மரப்பொந்தில் மைனா ஒன்று வாழ்ந்துவந்தது. அது ஒரு நாள் இரை தேடுவதற்காக வெளியே சென்றது. மைனா இல்லாத சமயம் பார்த்து முயல் ஒன்று வந்து அந்த மரப்பொந்தில் தங்கி இருந்தது.

வெளியே பறந்து சென்ற மைனா திரும்பி வந்தது. அது தன் பொந்தில் முயல் தங்கி இருப்பதைக் கண்டு சினம்கொண்டது. ''திருட்டு முயலே! இது என் வீடு. நான் இல்லாத சமயம் பார்த்து நீ என் இடத்தைப் பிடித்துக் கொண்டாயா? இங்கே தங்கியிருப்பது நீதியன்று. போ வெளியே'' என்று கூறியது.

அதுகேட்ட முயல், ''அற்பப் பறவையே! இது உன் வீடு அன்று. எல்லாருக்கும் பொதுவான இடம். மரங்கள், சாலைகள், குளங்கள், கிணறு கள், தண்ணீர்ப்பந்தல், சாவடி, சத்திரம் முதலிய பொது இடங்களில் எவர் வேண்டுமானாலும் தங்கி இருக்கலாம். அதனை அறியாமல் என்னை விரட்டப் பார்க்கிறாயா?'' என்றது.

மைனா, ''புத்திகெட்ட முயலே! எனக்குச் சொந்தமான பொந்தில் நீயே வலுவில் குடி புகுந்தாய். அன்றியும் எனக்கே புத்தி சொல்லவும் தொடங்கிவிட்டாய். மரியாதையாக வெளியே போகிறாயா இல்லையா?'' என்று கேட்டது. முயல், ''மதிகெட்ட மைனாவே! நீ என்னவேண்டு மானாலும் செய்துகொள். நான் இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டேன்'' என்று பிடிவாதம் செய்தது.

மைனாவும் முயலும் நெடுநேரமாக வாக்குவாதம் செய்தன. முடிவில் ஒரு நீதிபதியிடம் சென்று தமது வழக்கைக் கூறித் தீர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்தன.

அந்த யமுனையாற்றங்கரையில் ஒரு கிழப் பூனை இருந்தது. அதன் பெயர் கூர்ம்பல்லன் என்பது. அந்தக் கிழப்பூனை இரைதேட ஒரு தந்திரம் செய்தது. அது கையில் ஓர் உருத்திராக்க மாலையும் யோக தண்டமும் வைத்துக்கொண்டு துறவியைப்போலப் பாசாங்கு செய்தது. அங்கு நெருங்கி வந்த உயிரினங்களை ஏமாற்றிக் கொன்று தின்று வந்தது. அது ஒரு மரத் தின் அடியில் தவம் செய்வதுபோல அமைதியாக இருந்தது.

மைனாவும் முயலும் அந்தப் பூனையே தமது வழக்கைத் தீர்க்க வல்லது என்று எண்ணி அதனிடம் சென்றன. பூனையின் அருகே சென்றால் அது தம்மைக் கொன்றுவிடுமே என்று பயந்தன. தொலைவில் இருந்துகொண்டே தமது வழக்கைக் கூற முடிவுசெய்தன. மைனாவையும் முயலையும் கண்ட பூனை தன் கண்களை மூடிக்கொண்டது.

**மைனாவும் முயலும் :** ஐயா பூனையாரே! வணக்கம்.

**பூனை :** (மெதுவாகக் கண்களைத் திறந்து) தம்பிகளே! நீங்கள் யார்? என்னை எப்படித் தெரிந்துகொண்டீர்கள்? நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன?

**மைனா :** ஐயனே! எமக்குள் ஒரு வழக்கு இருக்கிறது. அதை நீங்கள் தீர்த்து வைக்கவேண்டும்.

**பூனை :** நண்பர்களே! நானோ தள்ளாத கிழவன். என் காதுகள் சரியாகக் கேட்பதில்லை. நீங்கள் தொலைவிலிருந்து பேசினால் எனக்கு எப்படிக் கேட்கும்? அருகே வந்து சொன்னால்தான் நான் கேட்க முடியும்.

**முயல் :** பெரியவரே! உங்கள் அருகில் வந்தால் நீங்கள் எங்களைக் கொன்று விடுவீர்களே? அருள்கூர்ந்து தொலைவிலிருந்தே எங்கள் வழக்கைக் கேட்டுத் தீர்ப்புக் கூறுங்கள். நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

**பூனை :** சிவ சிவ! என்ன சொன்னீர்கள்? உங்கள் பேச்சுப் பாதி கேட்டது; பாதி கேட்கவில்லை. நான் எப்போதும் நீதி தவறுவதில்லை. தருமம் தலைகாக்கும். சத்தியம் தவறினால் கடவுள் தண்டிப்பார். ஆகை யால், எப்போதும் உண்மையே பேசுவேன். கொல்லா விரதமும் பொய் சொல்லா விரதமும் நான் மேற்கொண்ட விரதங்கள். என்னை நம்புங்கள்; என் அருகில் வந்து உங்கள் வழக்கைக் கூறுங்கள்.

பூனையாரின் பேச்சை உண்மை என்று நம்பிய் மைனாவும் முயலும், ''அப்படியானால் உங்கள் அருகில் வந்து வழக்கைக் கூறுவோம்'' என்று பூனையின் அருகே நெருங்கிச் சென்றன. ஐயோ பாவம்! கூர்ம்பல்லன் அவற்றின்மீது பாய்ந்து அவ்விரண்டையும் இறுகப் பற்றிக் கொன்று தின்றது.

''ஒன்னாரைத் தேறேல்.'' —ஆத்திசூடி

''தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே, அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.''

—மூதுரை

# 3. ஏட்டுச் சுரைக்காய்

கிருஷ்ணதேவராயர் கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் விசயநகரத்தை ஆண்டுவந்தார். அவர் நீதி தவறாத நேர்மையாளர். அவருக்கு அறிவுரை கூற அப்பாஜி என்னும் மதி நுட்பம் மிக்க அமைச்சர் ஒருவர் இருந்தார். அப்பாஜி கிருஷ்ணதேவராயருக்கு அடிக்கடி அறிவுரை கூறி, அவர் நல்லாட்சி புரிய உதவி செய்து வந்தார்.

ஒரு நாள் வடநாட்டிலிருந்து ஐந்து பெரும்புலவர்கள் கிருஷ்ணதேவ ராயரின் அரண்மனைக்கு வந்தார்கள். அவர்களுள் ஒருவர் தருக்க நூலில் வல்லவர்; ஒருவர் இலக்கணத்தில் புலமை மிக்கவர்; மூன்றாமவர் இசையில் வல்லவர்; நான்காமவர் சோதிடத்தில் சிறந்தவர்; ஐந்தாமவர் மருத்துவத்தில் வல்லவர். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த கலையில் மட்டுமே வல்லவராக இருந்தார்கள். ஆனால், உலக அனுபவம் அவர்களுக்குச் சிறிதும் இல்லை. அவர்கள் அரசர் பலரையும் கண்டு தம் திறமையைக் காட்டிப் பரிசுகள் பெற்று வாழ்ந்துவந்தார்கள்.

பெரும்புலவர்கள் ஐவரின் வருகையால் கிருஷ்ணதேவராயர் மகிழ்ச்சி அடைந்தார். தம் அமைச்சர் அப்பாஜியிடம் அவர்களுடைய அருமை பெருமைகளைக் கூறிப் பாராட்டினார். அப்பாஜியோ அவர்களை அவ்வளவாக மதிக்கவில்லை. அவர் இராயரை நோக்கி, ''அரசே! இவர்களை எடுத்த எடுப்பிலேயே பாராட்டுவது சரியன்று. இவர்களுக்குப் போதுமான உலக அனுபவம் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டுமே வல்லவர்கள். ஏட்டுக் கல்வி மட்டுமே நாட்டு மக்களின் வளர்ச்சிக்குப் போதாது. உலக அனுபவமுடையவர்களால்தாம் நாடு முன்னேற முடியும். இந்தப் புலவர்கள் உலக அனுபவம் உடையவர்களா? என்பதை அறிந்தே நீங்கள் இவர்களுக்குப் பரிசு வழங்குவது நல்லது'' என்றார்.

அமைச்சரின் அறிவுரையைக் கேட்ட அரசர், ''நல்லது அப்பாஜி! அப்படியே செய்யலாம். இவர்களின் உலக அனுபவத்தைச் சோதிக்க என்ன செய்யலாம்?'' என்று வினவினார்.

அமைச்சர், ''அரசே! முதலில் இவர்களை ஒரு சத்திரத்தில் தங்கி இருக்கச் செய்யவேண்டும். அங்கு இவர்களாகவே உணவு சமைத்து உண்ணுமாறு செய்யவேண்டும்'' என்று கூறினார்.

அமைச்சர் கூறியபடியே அரசர் புலவர் ஐவரையும் ஒரு சத்திரத்தில் தங்கி இருக்கச்செய்து, ஐவரும் ஒன்றாகச் சமைத்து உணவு உண்டு வருமாறு கட்டளையிட்டார். அவர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்பதையும் அவ்வப்போது கவனித்துவருமாறு சில ஒற்றர்களை ஏவினார்.

ஐவருள் இசைப்புலவர் உணவைச் சமைக்கும் வேலையைக் கவனித்தார். அவர் தருக்கப் புலவரை நெய் வாங்கி வருமாறு கடைக்கு அனுப்பினார்; இலக்கணப் புலவரைத் தயிர் வாங்கிவரச் சொன்னார்; சோதிடக் கலைஞரை இலை பறித்துவரச் சொன்னார்; மருத்துவரைக் காய்கறி வாங்கி வருமாறு அனுப்பினார்.

தருக்கப் புலவர் கடைக்குப்போய் நெய் வாங்கிக்கொண்டு திரும்பினார். அவர் நெய்யை ஒரு தொன்னையில் ஏந்திக்கொண்டு வந்தார். வரும் வழியில் அவருக்கு ஓர் ஐயம் பிறந்தது. 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்று சிந்தித்துப் பார்த்தார். பலமுறை நினைத்துப் பார்த்தும் அவரது ஐயம் நீங்கவில்லை. முடிவில் ஒரு சோதனை செய்து பார்த்துவிடவேண்டும் என்று எண்ணித் தொன்னையைக் குப்புறக் கவிழ்த்தார். அவ்வளவுதான்! தொன்னையில் இருந்த நெய் முழுவதும் மண்ணில் கொட்டிவிட்டது.

தருக்கப் புலவரோ அதற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை. ''நெய் போனாலும் போகட்டும்; 'நெய்க்குத் தொன்னையே ஆதாரம்' என்னும் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டேன்'' என்று தமக்குத் தாமே பெருமையாகப் பேசிக்கொண்டு சத்திரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

சமைக்கும் பணியில் ஈடுபட்ட இசைப் புலவர் அடுப்பில் உலையை வைத்தார். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியது. அவர் பாட்டுப் பாடத் தொடங்கினார்.

உலையில் 'தளதள' என்று கொதிக்கும் ஒலி கேட்டது. அவர் தாளம் போட்டார். ஆனால், உலையில் கொதிக்கும் ஒலி அவர் போட்ட தாளத்துக்கு ஒத்துவரவில்லை. இசைவாணருக்குக் கோபம் வந்தது. உலைப் பானையைத் தூக்கித் தரையில் 'தொப்' என்று போட்டார். அது உடைந்து போய்விட்டது.

இலக்கணப் புலவர் தயிர் வாங்கச் சென்றார். அங்குத் தயிர் விற்றவள் 'தயிரோ தயிர்' என்று கூவிக்கொண்டு வந்ததைக் கேட்டார். அவளது குரல் ஒலி இலக்கணத்துக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்தார். ''என்ன இது? 'தயிரோ' என்னும் சொல்லின் ஈற்றில் உள்ள ஓகாரத்தை நீட்டி உச்சரிக்கவேண்டும். ஆனால், இந்தத் தயிர்க்காரியோ இலக்கண அறிவு இல்லாதவள். இலக்கணம் தெரியாத இவளிடமா நாம் தயிர் வாங்குவது? வேண்டவே வேண்டா'' என்று முடிவு செய்து வெறுங் கையுடன் சத்திரத்துக்குத் திரும்பினார்.

சோதிடக் கலைஞர் என்ன செய்தார் தெரியுமா? அவர் இலை பறிப்பதற்காக ஓர் ஆலமரத்தில் ஏறினார். அவர் பாதிமரம் ஏறியபோது அங்கிருந்த பல்லியொன்று ஒலித்தது. உடனே சோதிடர் பல்லி ஒலித்ததன் பலனைக் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 'தாம் எடுத்த காரியம் பலிக்காது' என்று பல்லி சொன்னதாக எண்ணி, இலை பறிக்காமல் மரத்தைவிட்டுக் கீழே இறங்கிச் சத்திரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

காய்கறிக் கடைக்குச் சென்ற மருத்துவப் புலவர் ஒவ்வொரு காயின் குணத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். அவரது ஆராய்ச்சியில் எந்தக் காயும் பயனுள்ளதாகத் தோன்றவில்லை. 'கத்தரிக் காய் சூடு; வாழைக்காய் வாயு; பீர்க்கங்காய் குளிர்ச்சி; அவரைக்காய் பித்தம்' என்று ஒவ்வொன்றன்மீதும் குறைகண்டார். முடிவில் ஒன்றும் வாங்காமல் சத்திரத்தை அடைந்தார்.

இவ்வாறு புலவர் ஐவரும் தங்கள் கலை ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டதால் அன்று முழுவதும் உணவு இன்றிப் பட்டினி கிடந்தார்கள். ஒற்றர்கள் அந்த ஐந்து கலைஞர்களின் செயல்களை ஒன்றுவிடாமல் இராயரிடம் சென்று தெரிவித்தார்கள்.

அமைச்சரின் சொல் சரியாகப் போய்விட்டது என்பதைக் கிருஷ்ண தேவராயர் அறிந்தார். அவர் புலவர் ஐவரையும் அழைத்து, ''புலவர் பெருமக்களே! நீங்கள் சாத்திரங்களைப் படித்திருக்கிறீர்களே தவிர, உலக அனுபவம் உங்களுக்குச் சிறிதும் இல்லை. உங்கள் படிப்பால் உங்களுக்கும் பயனில்லை; பிறருக்கும் பயனில்லை. போய் வாருங்கள்'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார்.

''உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.''

—திருக்குறள்

''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.''

—பழமொழி

# 4. நரியும் நண்டும்

ஒரு காட்டில் கிழநரி ஒன்று வாழ்ந்துவந்தது. முதுமையால் உடல் தளர்ந்த அந்த நரியால் இரைதேட முடியவில்லை. அதனால், அந்தக் கிழ நரி ஒரு தந்திரம் செய்தது.

நரி ஓர் ஏரிக்கரையில் ஒரு பெரிய கல்லின்மேல் அமர்ந்து, ஊளையிட்டு அழத் தொடங்கியது. நரியின் அழுகைக் குரலைக் கேட்ட நண்டு ஒன்று ஏரியிலிருந்து வெளியே வந்தது.

**நண்டு :** நரியாரே! ஏன் இப்படி ஊளையிட்டு அழுகிறீர்?

**நரி :** அன்பரே! நான் ஆதரவற்ற பாவியாக இங்கே இருக்கிறேன்.

**நண்டு :** நரியாரே! ஏன் உங்களுக்கு உறவினர் இல்லையா?

**நரி :** என் உறவினர் என்னைத் துரத்திவிட்டனர்; அவர்களுடன் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

**நண்டு :** வேடிக்கையாக இருக்கிறதே! அவர்கள் ஏன் உம்மை வெறுக்கிறார்கள்.

**நரி :** அதை ஏன் கேட்கிறீர்? நான் உயிர்களிடத்தில் அன்புடையவன். என் உறவினர்கள் ஒருநாள் ஒரு கூட்டம் கூடி இந்த ஏரியில் உள்ள நண்டுகளை எல்லாம் பிடித்துக் கொன்று தின்னவேண்டும் என்று முடிவுசெய்தார்கள். நான் அதைக் கேட்டு மனம் வருந்தினேன். என் உறவினர்களைப் பார்த்து, ''ஐயோ பாவம்! நண்டுகள் அழகானவை. நாம் அவற்றைக் கொன்று தின்பது தகாது; இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினேன். மற்ற நரிகளோ என் பேச்சைச் சிறிதும் மதிக்கவில்லை. அன்றியும் நான் அவர்களுடன் வாழத் தகுதியற்றவன் என்று என்மீது பகைமை கொண்டு என்னை விரட்டிவிட்டன. அதுமுதல் நான் தன்னந் தனியாக வாழும் பாவியானேன்! இனி, என்ன செய்வேன்?

**நண்டு :** அன்புடைய நரியாரே! எங்கள் வாழ்வுக்காக உம் உறவினரை நீர் பகையாக்கிக்கொண்டீர். உமது தியாகமே தியாகம்! உமது இரக்கக் குணத்தை என்னவென்பேன்! இனி நீர் எங்களோடு தங்கி வாழ்வதே சிறந்ததாகும். ஏதோ, எங்களுக்குக் கிடைக்கும்

உணவை உம்மோடு பங்குபோட்டு உண்போம். நீர் கவலை இல்லாமல் எம்முடன் வாழலாம்.

**நரி** : ஐயா! உமது அன்புக்கு நன்றி. நீர் என்னை விரும்பினாலும் உம்முடைய இனத்தவர் எல்லாரும் என்னை நம்புவார்களா? என் மீது அவர்களுக்கு இரக்கம் உண்டாகுமா?

**நண்டு** : அதைப்பற்றி நீர் ஏன் கவலைப்படவேண்டும்? என் இனத்தவர் யாவரும் என் பேச்சை நம்பக்கூடியவரே. அவர்களை நான் சம்மதிக்கச் செய்வேன். என் சொல்லை அவர்கள் ஒருபோதும் மீறமாட்டார்கள்.

**நரி** : சரி. உமது விருப்பம்போலவே நடக்கட்டும். எல்லாம் இறைவன் செயல்.

பின்னர், நண்டு தன் இனத்தவரைக் கண்டு, நடந்த செய்திகளை ஒன்று விடாமல் கூறியது. மற்ற நண்டுகள் எல்லாம் அதன் பேச்சை நம்பி நரியைப் பார்ப்பதற்கு அதன் பின்னால் வந்தன. நரியைக் கண்டதும் நண்டுகள் எல்லாம் வணக்கம் கூறின; அதனிடம் அன்பு பாராட்டின. நண்டுகளைக் கண்ட நரி மகிழ்ச்சி கொண்டது. துள்ளித்துள்ளிக் குதித்துக் கூத்தாடியது. நரியின் கூத்தைப் பார்த்த நண்டுகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஒரு நாள் இரவு நேரம். வானத்தில் முழு நிலவு பால்போல ஒளி வீசியது.

**நரி** : என் ஆருயிர் நண்பர்களே! நீங்கள் என்றாவது நிலா வெளிச்சத்தில் வெளியே சென்று உலாவி இன்பமாகப் பொழுது போக்கியதுண்டா?

**நண்டுகள்** : இனிய நண்பரே! நாங்கள் எப்படி வெளியே செல்லமுடியும்? வெளியே போனால் உங்கள் இனத்தவர் எங்களைச் சும்மா விடுவார்களா? எங்களைப் பிடித்துக் கொன்று தின்றுவிட மாட்டார்களா?

**நரி** : நண்பர்களே! நான் இருக்கிறேன்; உங்களை யாராவது பிடிக்க வந்தால் அவருடன் சண்டை போட்டுக் கொன்றுவிடுவேன். நீங்கள் சிறிதும் அஞ்சாமல் என்னுடன் வாருங்கள். நிலா வெளிச்சத்தில் ஆடியும் பாடியும் இன்பமாக உலாவி வரலாம்.

நரியின் தந்திரத்தை உணராமல் நண்டுகள் எல்லாம் அதன் பேச்சை நம்பி வெளியே புறப்பட்டன.

அதுவே தக்க சமயம் என்று நரி எண்ணி, தன்னுடன் வந்த நண்டுகளை வெட்ட வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துப்போயிற்று. அந்தப் பக்கத்தில் நீர்நிலைகள் இல்லை.

நரி என்ன செய்தது தெரியுமா? பெருங்குரலெடுத்து ஊளையிட்டது. அக்கம்பக்கத்தில் இருந்த நரிகள் எல்லாம் அங்கே ஓடிவந்தன; நண்டுகளைச் சூழ்ந்து கொண்டன. பாவம்! நண்டுகள் அவற்றிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை. அதனால் நரிகள் நண்டுகளைப் பிடித்துக் கண்டதுண்டமாகக் கடித்துத் தின்றன. எல்லா நண்டுகளும் நயவஞ்சக நரிகளுக்கு விருந்தாயின.

''வஞ்சனைகள் செய்வாரோ(டு) இணங்க வேண்டா.''

''மாற்றானை உறவென்று நம்ப வேண்டா.''

—உலகநீதி

# 5. புத்தரும் சிறுவனும்

புத்தர் பெருமான் ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தோன்றியவர். அவர் உலக மக்களின் நன்மைக்காகப் பல உண்மைகளை எடுத்துக் கூறியவர். புத்தர் அரச குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும், உலக மக்களின் துன்பங்களைக் கண்டு முற்றும் துறந்த முனிவர் ஆனார். ''ஆசையே துன்பங்களுக்கெல்லாம் காரணம்; ஆசையை நீக்கினால் இன்பமாக வாழலாம்'' என்னும் உண்மையை அவர் மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

புத்தர் இளவரசராக இருந்தபோதே மக்கள் பிணி, மூப்பு, இறப்பு ஆகியவற்றால் அடையும் துன்பங்களைக் கண்டார். அவற்றைப் போக்கிப் பேரின்ப வழியைக் காணவேண்டும் என்னும் ஆசைகொண்டார். அதனால் தமது அரச வாழ்க்கையை உதறித் தள்ளினார். தம் ஆருயிர்போன்ற அழகிய மனைவி யசோதரையை மறந்தார்; மதிமுகம் வாய்ந்த மகன் இராகுலனையும் விட்டுப் பிரிந்தார்.

நள்ளிரவில் அரண்மனையைவிட்டு வெளியேறினார். இரவு பகல், பனி வெயில் என்று பாராமல் அலைந்தார். நடந்து நடந்து அவர் கால்கள் தளர்ந்தன. உணவும் உறக்கமும் இல்லாமல் அவரது உடல் சோர்ந்தது. ஒரு நாள் உச்சி வேளையில் களைப்பு மேலிட்டுத் தரையில் மயங்கிக் கிடந்தார்.

களைப்புற்றுப் படுத்திருந்த புத்தர் பெருமானை ஆடுகள் மேய்த்து வரும் சிறுவன் ஒருவன் கண்டான். அவன் மிகவும் இரக்கமனங் கொண்டவன். உடனே, அவர் முகம் வெயிலால் வாடாத வண்ணம் மரக்கொம்புகளை வெட்டி அருகில் நட்டான். அவரது முகத்தில் நிழல் படர்ந்தது. ஆனாலும் அவரது களைப்பு நீங்கவில்லை.

அதுகண்ட சிறுவன், ''ஐயோ! தெய்வக் குலத்தில் பிறந்த இந்தப் பெரியவரை நான் எப்படித் தீண்டுவேன்? இவரது பசியைப் போக்க ஏதேனும் செய்யவேண்டும்?'' என்று மனத்துக்குள் எண்ணினான். அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தன் மந்தையில் இருந்த வெள்ளாடு ஒன்றை ஓட்டிவந்தான்; அதன் பாலைப் புத்தரின் வாயில் கறந்துவிட்டான்.

புத்தரின் மயக்கம் நீங்கியது. என்னே வியப்பு! சிறுவன் நட்ட கொம்புகள் எல்லாம் தழைத்து மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசின. அது



கண்ட சிறுவனும், ''ஆ! இவரே எங்கள் தெய்வம்!'' என்று தரையில் விழுந்து அவரை வணங்கினான்.

மயக்கம் தெளிந்த புத்தர் சிறுவனைப் பார்த்து, ''தம்பி! பாத்திரத்தில் சிறிது பாலைக் கறந்து தா, பசியாக இருக்கிறது,'' என்று கேட்டார். அது கேட்ட சிறுவன், ''ஐயா! நான் ஓர் ஏழைச் சிறுவன்; தாழ்ந்த குலத்தில் பிறந்தவன்; நான் வைத்திருக்கும் மண்கலயத்தை நீங்கள் தொட்டால் பாவம் உண்டாகும், என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கூறினான்.

புத்தர் சிறுவனிடம், ''தம்பி! இதில் பாவம் ஒன்றும் இல்லை. துன்பத்தால் வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுவது புண்ணியமே ஆகும். உலக மக்கள் யாவரும் ஒரு குலம்; எல்லாரும் கடவுளின் மக்கள். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்பது இல்லை. இது வெறும் கற்பனையே,'' என்றார்.

சிறுவன் ''ஐயனே! நீங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை. என் தந்தையார், பாட்டனார், உறவினர் எல்லாரும் நாங்கள் தாழ்ந்த சாதியார் என்றே கூறிவந்தார்கள். உங்களைப் போன்ற உயர்சாதிக்காரர்களைத் தொடக்கூடாது என்றும் கற்பித்து வந்தார்கள். தாங்களும் அவ்வாறே நடந்தார்கள். நீங்கள் கூறுவது வியப்பாக இருக்கிறதே!'' என்று சொன்னான்.

புத்தர் அந்தச் சிறுவனைப் பார்த்து, ''அன்பனே, துன்பம் உண்டாகும் போது மக்கள் வேறுபாடு கருதுவது இல்லை; அவர்களைத் தங்கள் உறவினராகவே எண்ணித் துன்பத்தை நீக்கப் பாடுபடுவார்கள். உன் உடம்பில் ஓடும் இரத்தம், என் உடம்பில் ஓடும் இரத்தம் இரண்டுமே சிவப்பு நிறந்தானே? மக்கள் அனைவருடைய கண்ணீரும் உப்புச் சுவை உடையதே. ஆகையால், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை. மக்களுள் அவரவர் செய்யும் நல்ல செயல்களாலேயே அவர்களுக்குச் சிறப்பு உண்டாகிறது.

இந்த உலகத்தில் நன்மை செய்பவரே உயர்ந்த குலத்தவர்; தீமை செய்பவர் தாழ்ந்த குலத்தவர். அந்தத் தீயவர்களே தீண்டத்தகாதவர். நான் மிகவும் துன்பப்படும்போது நீ என்னைக் காப்பாற்றினாய். நீயே உயிரைக் காத்த உத்தமன். ஆகையால், நீ உயர்குலத்தைச் சார்ந்தவன். இதில் ஐயம் வேண்டா'' என்று கூறினார்.

சிறுவன் புத்தர் பெருமானைப் பார்த்து. ''உலகம் போற்றும் உத்தமரே! உங்களால் என் உள்ளம் தெளிந்தது. நான் பல சிறந்த உண்மைகளை அறிந்துகொண்டேன். இதோ நான் கலயத்தில் கொண்டுவரும் பாலை அருந்துங்கள்'' என்று ஒரு வெள்ளாட்டின் பாலைக் கறந்து கொண்டுவந்து கொடுத்தான். புத்தர் அந்தப் பாலைக் குடித்துக் களைப்பு நீங்கினார்.

சிறுவன் அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

''சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.''

—நல்வழி

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''

—திருக்குறள்

# 6. உண்மை எது? போலி எது?

இன்பபுரி என்னும் ஊர் ஒன்று இருந்தது. பெயருக்கு ஏற்ப அந்த ஊர் மக்கள் எல்லா வகையிலும் இன்பமாகவே வாழ்ந்துவந்தார்கள். அந்த ஊரில் ஒரு கலையரங்கம் இருந்தது. அவ்வப்போது அந்த அரங்கில் ஏதேனும் வேடிக்கையான நிகழ்ச்சிகள் நடைபெறும். மக்கள் அவற்றைக் கண்டுகளிப்பது வழக்கம்.

ஒரு நாள் அந்தக் கலையரங்கில் கோமாளி ஒருவன் கலை நிகழ்ச்சிகள் நடத்தினான். வேடிக்கையான அந்த நிகழ்ச்சிகளைக் கண்டவர்கள் மிகவும் இன்பம் அடைந்தார்கள். கோமாளி புதுமையும் வியப்பும் மிக்க நிகழ்ச்சி களை நடத்திக் காட்டினான்.

அவன் செய்துகாட்டிய பலகுரல் நிகழ்ச்சி அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தது. அவன் காக்கை, குயில், சேவல் முதலிய பறவை களைப்போலக் கத்தினான். கழுதை, எருமை, சிங்கம் முதலிய விலங்கு களைப்போலக் குரல்கொடுத்தான். அது கேட்கக் கேட்க வியப்பாக இருந்தது. பின்னர், அவன் ''பன்றியைப்போல உறுமப் போகிறேன் பாருங்கள்'' என்று கூறிக் கீழே குனிந்தான்; 'ஈக்பீக்-ஈக்பீக்' என்று கத்தத் தொடங்கினான். ''ஆ! ஆ! கோமாளியின் குரல் உண்மைப் பன்றியின் குரலைப்போலவே இருக்கிறது'' என்று அவையினர் பலரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்; கோமாளியை மனமாரப் பாராட்டினார்கள். அவையோரின் ஆரவாரத்தைக் கேட்ட கோமாளி மகிழ்ச்சிகொண்டான்; பலமுறை தொடர்ந்து பன்றியைப் போலவே உறுமினான்.

அந்த அவையிலிருந்த குடியானவன் ஒருவனுக்குப் பன்றியின் குரல் பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவன் அவையோருக்கிடையே எழுந்து நின்று, ''அவையோர்களே! இந்தக் கோமாளி பன்றிபோலக் கத்தியது பொருத்தமில்லை. இது உண்மைப் பன்றியின் குரல் அன்று. இதுபோல எந்தப் பன்றியும் கத்துவதில்லை'' என்றான்.

குடியானவனின் பேச்சு அவையோருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள், ''போதும், நிறுத்து உன் பேச்சை! உன்னால் உண்மைப் பன்றியைப்போலக் கத்தமுடியுமா? சொல், பார்க்கலாம்!'' என்று கூறினார்கள். குடியானவன், ''ஓ! என்னால் உண்மைப் பன்றியைப்போலவே கத்தமுடியும்! நாளை இந்தக் கலையரங்கத்தில் கத்திக் காட்டுவேன். இந்தக் கோமாளியும் வந்து கத்தட்டும். உண்மை எது? போலி எது? என்பதைத் தெரிந்துகொள்ளலாம்'' என்றான்.

அவன் பேச்சைக் கேட்ட அவையினர் அவனைச் சிறிதும் மதிக்கவில்லை. ''இவனுக்குப் பித்தம் பிடித்துவிட்டது. இவனாவது! பன்றியைப்போலக் கத்துவதாவது! நாளை பார்க்கலாம்'' என்று கூறி அவரவர் வீட்டுக்குத் திரும்பினர்.

அடுத்த நாள், கலையரங்கில் எள் விழுவதற்கும் இடமில்லாதபடி கூட்டம் கூடியது. இருவருள் எவன் உண்மையான பன்றியைப்போல் கத்துவான் என்பதைக் கேட்பதற்காக மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். அரங்கத்தின் மேடையில் கோமாளி ஏறினான். அவன் மேடை ஏறியதும் மக்களின் கைதட்டல் வானத்தை எட்டியது. அவன் முந்திய நாளில் செய் ததுபோலப் பன்றியின் குரல் கொடுக்கத் தொடங்கியதும் அவையோரின் கைதட்டல் அடங்குவதற்கு நெடுநேரம் ஆயிற்று. ''குடியானவன் இந்தக் கோமாளியைப்போலக் கத்தமுடியுமா? அவன் ஒரு பொறாமைக்காரன். அவன் இவனுடன் போட்டி போடமுடியுமா?'' என்று சிலர் கூறினர்.

கோமாளியின் நிகழ்ச்சி முடிந்தது. குடியானவன் மேடையில் ஏறினான். அவன் தன் உடம்பை ஒரு போர்வையால் போர்த்துக்கொண்டு வந்தான். அந்தத் தோற்றத்தைக் கண்டு எல்லாரும் கைதட்டிக் கேலியும் கிண்டலும் செய்தார்கள். 'இவன் எப்படிப் பன்றிபோலக் கத்தமுடியும்' என்று சிலர் வெறுப்போடு பார்த்தனர்.

குடியானவன் கீழே குனிந்தபடியே நின்றான். அடுத்த விநாடியே 'ஈக்பீக் - ஈக்பீக்' என்னும் குரல் உரக்கக் கேட்டது. அவையினர் அதைக் கேட்டு ஏளனமாகச் சிரித்தனர்; ''என்ன இது! இப்படியா பன்றி கத்தும்? இது பன்றியின் குரலே அன்று. இவன் நம்மை ஏமாந்தவர்கள் என்று எண்ணி விட்டான் போலும்!'' என்று கூறினர்.

சிலர், ''போதும் உன் வேடிக்கை! மரியாதையாக உள்ளே போய்விடு!'' என்று கூச்சலிட்டார்கள். அவையோரின் அவமதிப்பைக் கண்ட குடியானவன் சிறிதும் அஞ்சவில்லை. மீண்டும் மீண்டும் அதே குரலை ஒலிக்குமாறு செய்தான். அவையோர் மேலும் மேலும் அவனை ஏளனம் செய்தபடியே இருந்தனர்.

சிறிது நேரம் கழித்துக் குடியானவன் தன் உடம்பில் போர்த்தியிருந்த போர்வையை எடுத்துக் கீழே போட்டான். அப்போது அவனது கை இடுக்கில் இருந்த சிறிய பன்றியை எடுத்து அவையில் காட்டினான். ''அன்புடைய அவையோர்களே! இவ்வளவு நேரமாக நீங்கள் கேட்ட குரல் என் குரல் அன்று. இதோ இந்தப் பன்றிதான் கத்தியது. நான் இதன் காதைத் திருகத் திருக இது 'ஈக்பீக் - ஈக்பீக்' என்று கத்தியபடியே இருந்தது. நான் வாயைத்தான் அசைத்தேன். உண்மைப் பன்றியின் குரலைத்தான் நீங்கள் கேட்டீர்கள். வேண்டுமானால் மீண்டும் கேட்டுப் பாருங்கள்'' என்று கூறிய குடியானவன் அந்தப் பன்றியின் காதைத் திருகினான்.

பன்றி மீண்டும் 'ஈக்பீக் - ஈக்பீக்' என்று கத்தியது. குடியானவன் அவையோரைப் பார்த்து, ''நீங்களே சொல்லுங்கள், கோமாளி இதைவிடச் சிறப்பாக எப்படிக் கத்தமுடியும்? என்று கேட்டான்.

உண்மைப் பன்றியின் குரலைக் கேட்ட அவையோர் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை. அவர்கள் இனி என்ன பேசுவது என்று புரியாமல் திகைத்தார்கள்.

போட்டியில் கோமாளி தோல்வி அடைந்தான்; குடியானவன் வெற்றி பெற்றான். கோமாளி நாணத்தால் தலைகுனிந்தான். ''உண்மையை உணராமல் போலியை நம்பி ஏமாந்தோமே! குடியானவனை வீணாகப் பழித்தோமே!'' என்று அவையோர் மிகவும் வருந்தினர். உண்மையை உணர்த்திய குடியானவனுக்கு மாலை சூட்டி ''உண்மையை உணர்த்திய உத்தமன் வாழ்க! வாழ்க!'' என்று பாராட்டி வாழ்த்தினார்கள்.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு.''

—திருக்குறள்

# 7. பொறுமையுள்ள வேலையாள்

முன் காலத்தில் அரசன் ஒருவன் தனக்கு மிகவும் நம்பிக்கையான வேலையாள் வேண்டுமென்று விரும்பினான். அந்த வேலையாள் பொறுமையும் பணிவும் உடையவனாக இருக்கவேண்டும் என்றும் எண்ணினான். பல நாள்களாகத் தேடியும் அத்தகைய பணியாளன் கிடைக்கவில்லை. முடிவில் அரசன் ஒரு வழியைக் கண்டுபிடித்தான்.

மன்னன் தன்னிடத்தில் நாள் முழுவதும் வேலைசெய்ய ஓர் ஆள் வேண்டுமென்று தன் நகர் முழுவதும் பறையறைவித்தான். நகர மக்கள் எல்லாருக்கும் செய்தி தெரிந்தது. அதைக் கேட்டு இரண்டு வேலையாள்கள் வேலை விரும்பி அரண்மனைக்குச் சென்றார்கள். அரசன் இட்ட கட்டளையை நிறைவேற்ற ஆவலுடன் காத்திருந்தார்கள்.

வேலையாள்கள் இருவர் தன் அரண்மனையை நாடிவந்ததை அறிந்த மன்னன் மகிழ்ச்சி அடைந்தான்; அவ்விருவருள் எவன் உண்மையான வேலையாள் என்பதை ஆய்ந்து அறிய விரும்பினான். ஒவ்வொருவருக்கும் ஓட்டையுள்ள ஒவ்வொரு பெரிய பாத்திரத்தைக் கொடுத்து, ''நீங்கள் இருவரும் இன்று முழுவதும் வேலை செய்தால், பொழுது சாய்ந்ததும் உங்களுக்குத் தகுந்த பரிசு கிடைக்கும். இந்த அரண்மனைத் தோட்டத்தில் உள்ள கிணற்று நீரை மொண்டு மொண்டு உங்கள் பாத்திரத்தை நிரப்ப வேண்டும்'' என்றான்.

அரசன் இட்ட கட்டளையைக் கேட்டு, அவ்விருவரும் திகைத்தனர். ஆயினும் வேலை செய்தால் கூலி கிடைக்குமே என்று அந்த வேலையைச் செய்யத் தீர்மானித்தனர். உடனே அவரவர் தமக்குக் கொடுக்கப்பட்ட குடத்தைக் கயிற்றில் கட்டிக் கிணற்றில் விட்டனர்; தண்ணீரை மொண்டு, பாத்திரத்தில் ஊற்றத் தொடங்கினர். அவர்கள் தண்ணீர் ஊற்ற ஊற்ற ஓட்டையின் வழியாக நீர் ஒழுகிக்கொண்டே இருந்ததால் பாத்திரம் நிரம்பவில்லை.

அதுகண்ட இருவருள் ஒருவன், வெறுப்புக் கொண்டான்; களைப்பும் அடைந்தான். ''இனி இந்த வேலையைச் செய்வதில் பயனில்லை. இதை விட்டுவிட்டுப் போவதே நல்லது'' என்றான். மற்ற வேலையாளோ, ''இந்த வேலையினால் உண்டாகும் நன்மை தீமை அரசருடையது. பொழுது சாயும் வரையில் நமக்கு இட்ட வேலையைச் செய்வதே நமது கடமை'' என்று கூறி, தன் வேலையைக் கண்ணும் கருத்துமாகச் செய்தான்.

அதைக் கேட்ட மற்றவன், அப்படியாயின் நீயே இந்த வேலையைச் செய். எனக்கு இதில் விருப்பமில்லை. நான் போகிறேன்'' என்று பாத்திரத்தை வைத்துவிட்டுப் போய்விட்டான். மற்ற வேலையாளோ பொறுமையைச் சிறிதும் இழக்காமல் ஊக்கத்துடன் தன் வேலையில் ஈடுபட்டான். அவன் சிறிதும் மனம் தளராமல் தண்ணீரை மொண்டுமொண்டு பாத்திரத்தில் ஊற்றியபடியே இருந்தான். பொழுதும் சாய்ந்தது. அப்போதும் பாத்திரம் நிரம்பவில்லை. கிணறும் வற்றிவிட்டது. முடிவில் அந்த வேலையாள் கிணற்றை எட்டிப் பார்த்தான். கிணற்றில் ஏதோ ஒரு பொருள் 'பளபள' வென்று ஒளிவீசுவதைக் கண்டான். அந்தப் பொருளும் குடத்தில் வருமாறு தண்ணீரை முகந்து இழுத்தான். குடம் மேலே வந்தது. குடத்தில் விலை யுயர்ந்த ஒரு வைர மோதிரம் இருக்கக் கண்டு வியப்புக்கொண்டான்.

பொறுமையுள்ள அந்த வேலையாள் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். ''ஆ! ஆ! அரசர் இட்ட வேலையின் பயனை இப்போதுதான் அறிந்தேன்! இந்த வைர மோதிரத்தை அரசரிடமே கொண்டுபோய்ச் சேர்ப்பேன் '' என்று தனக்குள் கூறிக்கொண்டான். உடனே அந்த மோதிரத்தை அரண்மனைக்குக் கொண்டுபோய், ''அரசே, எனக்கு அளித்த வேலைக்கு நன்றி. இதோ இந்த வைர மோதிரம் கிடைத்தது '' என்று கூறி மோதிரத்தை அரசரிடம் நீட்டினான்.

மன்னன் வேலையாளைப் பார்த்து, ''அன்பனே! உன் பொறுமையைப் பாராட்டுகிறேன். ஒருவரும் செய்யவிரும்பாத இந்த அரிய வேலையை நீ பொறுமையோடு செய்தாய்! நீயே எனக்கு முழுநம்பிக்கையான பணியாள் என்று உறுதியாக நம்புகிறேன். நீ செய்த அரிய வேலைக்காக இந்த மோதிரத்தை நீயே வைத்துக்கொள். உன் பொறுமைக்குப் பரிசாக இதனை அளிக்கிறேன். இன்றுமுதல் நீ அரண்மனைத் தலைமை வேலையாளாக இருக்கலாம் '' என்று அவனைத் தன் நம்பிக்கையுள்ள பணியாள்னாக அமர்த்திக்கொண்டான்.

பொறுமை இன்றி வேலையை இடையில் விட்டுச்சென்ற வேலையாள் அச் செய்தி கேட்டு வருத்தப்பட்டான்.

''பொறுத்தவர் பூமி ஆள்வார்.''

—பழமொழி

# 8. பூனைக்கு மணி கட்டுபவர் யார்?

வயலூர் என்னும் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் தம் நிலத்திலிருந்து கிடைத்த நெல்லைத் தமது வீட்டில் மூட்டை மூட்டையாகக் கட்டிவைத்தார். அந்த வீட்டில் எலிகள் ஏராளமாக இருந்தன. அவை நெல் மூட்டைகளைக் கடித்து நாசம்செய்தன. அதனால் அந்தச் செல்வர் தமது வீட்டில் ஒரு பெரிய பூனையை வளர்த்தார். அந்தப் பூனை ஒவ்வோர் அறையாகச் சென்று எலிகளை வேட்டையாடியது. வீட்டில் இருந்த பல எலிகள் இறந்துவிட்டன. மற்ற எலிகள் தங்கள் கதி என்ன ஆகுமோ? என்று அஞ்சியோடின.

ஒரு நாள் சில எலிகள் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தின. அந்தக் கூட்டத்திற்கு எலியரசு தலைமை தாங்கியது.

**எலியரசு** : நண்பர்களே! இந்த வீட்டில் நடமாடும் பூனை நமக்கு எமனாக வந்திருக்கிறது. அது மெல்ல நடந்து வந்து நம் இனத்தவர் பலரைக் கொன்று தின்றுவிட்டது. இனிமேல், நாம் சும்மா இருந்தால் நமது இனமே அழிந்துவிடும். என்ன சொல்கிறீர்கள்?

**இரண்டாம் எலி** : ஆமாம் அரசே! நேற்று அந்தப் பொல்லாத பூனை என் மனைவியைக் கொன்றுவிட்டது.

**மூன்றாம் எலி** : ஐயோ! உனக்கோ மனைவி மட்டும் இறந்தாள். அந்த எமன் என் மனைவியோடு ஐந்து குழந்தைகளையும் வயிற்றில் போட்டுக் கொண்டதே!

**நான்காம் எலி** : இந்தத் துன்பத்திலிருந்து பிழைக்க எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. பூனையின் பாதங்கள் மென்மையாக இருப்பதால்தான் அது நடந்தால் ஓசை கேட்பதில்லை. அதன் கழுத்தில் ஒரு மணியைக் கட்டவேண்டும். பூனை நடந்தால் 'டிங் டிங்' என்னும் ஒலி கேட்கும். அதுகேட்டு நாம் ஓடி ஒளிந்துகொள்ளலாம். எப்படி என் கருத்து?

**எலியரசு** : நல்ல கருத்து. நம் முன்னோர்களுக்குக்கூட இப்படிப்பட்ட அருமையான கருத்துத் தோன்றவில்லை. ஆனால், உங்களுள் யார் பூனையின் கழுத்தில் மணியைக் கட்ட ஆயத்தமாக இருக்கிறீர்? கூறுங்கள்.

**இளைய எலி** : அரசே! நீரே நமக்குள் வலிமை வாய்ந்தவர். அதனால் நீரே பூனைக்கு மணியைக் கட்டுவது நல்லது.

**எலியரசு** : ஓ கட்டுவேன். ஆனால், நான் செத்துப் போய்விட்டால், உங்களை யார் காப்பாற்றுவார்? எனவே, உங்களுள் யாராவது முன்வருவது நல்லது.

**இரண்டாம் எலி** : நான் கட்டுவேன். ஆனால் எனக்குப் பார்வை சரியாக இல்லை. வேறு எவரேனும் இந்தச் செயலைச் செய்யலாமே.

**மூன்றாம் எலி** : பூனைக்கு மணிகட்ட நான் ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால், எனக்குத் திருமணம் உறுதியாகி இருக்கிறது. ஆகையால், இந்தச் செயலை இப்போது நான் செய்ய முடியாது.

**நான்காம் எலி** : நான் திருமணமானவன். என் மனைவி மக்களைத் தவிக்க விட்டுவிட்டு இந்தச் செயலை நான் செய்ய விரும்பவில்லை.

முடிவில் ஒரு கிழ எலி எழுந்து, ''இந்தச் செயலைச் செய்வதற்கு எனக்கு வலிமையும் இல்லை; திறமையும் இல்லை. ஆகையால், என்னால் பூனைக்கு மணி கட்ட இயலாது'' என்று கூறித் தன் இடத்தில் அமர்ந்தது.

எந்த எலியும் பூனையின் கழுத்தில் மணியைக் கட்ட முன்வரவில்லை.

எலிகள் பேசிக் கொண்டிருந்தபோது 'மி-யா-வ்', 'மி-யா-வ்' என்னும் குரல் கேட்டது. பூனை மேலே இருந்து எட்டிப் பார்த்தது. அவ்வளவு தான்! எலிகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மூலைக்கொன்றாக ஓடி ஒளிந்தன.

''சொல்வது எளிது; செய்வது அரிது.''
—பழமொழி

''சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.''
—திருக்குறள்

# 9. வரப்புயர...!

நம் நாட்டில் ஆண்களைப்போலவே பெண்மணிகளும் புலமை பெற்று விளங்கினார்கள் என்பதற்கு ஔவையார் நல்ல எடுத்துக்காட்டாவார். அக் காலத்தில் ஔவையாரை அறியாத தமிழர் ஒருவரும் இலர். அவர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு நல்ல அறிவுரைகள் புகட்டினார். அவரைப்பற்றிய பல கதைகள் நம் நாட்டில் வழங்குகின்றன. ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நூல்கள் மக்களுக்கு நல்ல ஒழுக்கங்களையும் சிறந்த அறிவையும் கற்பிக்கின்றன.

ஔவையார் வாழ்ந்த காலத்தில் சோழ நாட்டைக் குலோத்துங்கன் என்ற மன்னன் சிறப்புடன் ஆண்டுவந்தான். அவன் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவன்; கொடையிலும் வீரத்திலும் புகழ்பெற்றவன். நாட்டு மக்களின் நலமே தன் நலமாக எண்ணி அவன் செங்கோல் செலுத்திவந்தான். அவனது ஆட்சியில் குடிமக்கள் அனைவரும் எல்லா நன்மைகளும் பெற்று இன்பமாக வாழ்ந்துவந்தனர்.

ஒருசமயம் குலோத்துங்க மன்னனுக்குத் திருமணம் நடைபெற்றது. பல நாட்டு மன்னருக்கும் திருமண அழைப்பு அனுப்பப்பட்டது. பல நாட்டு அரசர்களும், புலவர்களும், செல்வர்களும், பெரியவர்களும் திருமணத்துக்கு வந்திருந்தார்கள். திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மன்னன் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசுகள் பல வழங்கினான். அவர்கள் சோழனை அகம் குளிர, முகம் மலர வாழ்த்தினார்கள். ஔவையாரும் திருமணத்திற்குச் சென்றிருந்தார்.

திருமணத்துக்குச் சென்றவர் பலர் அரசனின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறி, ''பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!'' என்று வாழ்த்தினர்; சிலர் ''காவிரி மணலினும் பல்லாண்டுகள் பலவளமுடன் வாழ்க!'' என்று வாழ்த்தினர். ஒவ்வொருவரும் நெடுநேரம் பேசியதால் விருந்துக்கு நேரமாகிவிட்டது. ஔவையாரின் முறை வந்தது. ஔவையாரோ, பிறரைப்போல் நெடுநேரம் பேசவில்லை; 'வரப்புயர' என்று சுருக்கமாகக் கூறித் தமது இருக்கையில் அமர்ந்துவிட்டார்.

ஔவையாரின் சொல்லைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர்; திருமணத்துக்கும் வரப்புக்கும் என்ன தொடர்பு என்று அறியாமல்

திகைத்தனர். மணமகனாகிய மன்னன் எழுந்து, ''தமிழன்னையே! நீங்கள் கூறிய சொற்றொடரின் பொருள் எங்களுக்கு விளங்கவில்லை. அதன் பொருளை விளக்கிக் கூறவேண்டும்'' என்று வேண்டினான்.

உடனே ஔவையார், ''வேந்தே, இது தெரியவில்லையா?

வரப்புயர நீர் உயரும்;
நீர் உயர நெல் உயரும்;
நெல் உயரக் குடி உயரும்;
குடி உயரக் கோல் உயரும்;
கோல் உயரக் கோன் உயர்வான்.''

என்று கூறி, அதன் கருத்தை விளக்கினார்.

''பயிர்த் தொழிலே நாட்டின் உயிர்த்தொழில் ஆகும். பயிர் நன்றாகச் செழித்து வளர்வதற்கு நீர்வளம் வேண்டும். வயல்களில் வரப்பு உயருமானால் நீர் மிகுதியாகத் தேங்கும். நீர் தேங்கினால் நிலம் வளமுடையதாகும். நிலம் வளமுடையதானால் நெற்பயிர் செழித்து வளரும்; நெற்பயிர் செழித்து வளர்ந்தால் விளைச்சல் அதிகரிக்கும்; விளைச்சல் அதிகரித்தால் குடிமக்கள் பசியும் பஞ்சமும் இன்றி நலமாக வாழ்வார்கள். அவர்கள் நலமாக வாழ்ந்தால்தான் நாட்டில் நல்லாட்சி ஏற்படும். அரசன் நீதியுடன் நல்லாட்சி புரிந்தால்தான் அவனது புகழ் எங்கும் பரவும்.'' இந்தக் கருத்துகளை உள் அமைத்தே ஔவையார் அரசனை வரப்புயர என்று வாழ்த்தினார்.

ஔவையாரின் மதிநுட்பத்தையும் பெரும்புலமையையும் அறிந்த மன்னனும் அவையோரும் அவரை வியந்து பாராட்டினர். குலோத்துங்கன், ஔவையாருக்கு நல்விருந்து அளித்துப் பொன்னும் பொருளும் பரிசாக வழங்கினான்.

''குடித்தனம் செழித்தால்
துரைத்தனம் செழிக்கும்.''
—பழமொழி

# 10. தொட்டதெல்லாம் பொன்

ஓர் ஊரில் பெருமாள் என்னும் செல்வன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவனுக்கு ஏராளமான செல்வம் உண்டு; வீடும் நிலமும் உண்டு; ஆனால், போதும் என்னும் மனம் இல்லை. அவன் நல்ல ஆடைகளை உடுத்த மாட்டான்; நல்ல உணவை உண்ணவும்மாட்டான்; மேலும் மேலும் செல்வம் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

அந்தப் பேராசைக்காரன் நாள்தோறும் தன் பணப்பெட்டியைத் திறப்பான்; பணத்தை எண்ணி எண்ணிப் பூரிப்புக்கொள்வான்; உலகத்தில் தானே பெருஞ்செல்வன் என்று இறுமாப்பு அடைவான்; இரவு, பகல் எந்நேரமும் பணப்பெட்டியை விட்டு நீங்கமாட்டான்; இரவு நேரமும் அவனுக்குப் பகலாகவே இருக்கும்; பணப்பெட்டியின் பக்கத்தில்தான் படுத்துத் தூங்குவான்.

பெருமாளின் பேராசை மேலும் மேலும் வளர்ந்துகொண்டே இருந்தது. அதனால் அவன் தொட்டதெல்லாம் பொன்னாக மாறக்கூடாதா? என்று எண்ணி ஏங்கி நிற்பான். கல்லையும் மரத்தையும் பார்த்தால், ''இவற்றால் என்ன பயன்? இவை பொன்னாக மாறினால் எவ்வளவு நன்மையாக இருக்கும்!'' என்று நினைப்பான்.

ஒரு நாள் அவன், ''கடவுளே! நான் தொட்டதெல்லாம் பொன்னாக வரம் தரவேண்டும்'' என்று வேண்டினான். அன்று இரவு ஒரு தேவதை அவன் கனவில் தோன்றி, ''பெருமாள்! இனி, நீ தொட்டதெல்லாம் பொன்னாகும்'' என்று கூறி மறைந்துவிட்டது.

பெருமாள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'இனி நானே குபேரன்!' என்று அவன் துள்ளிக் குதித்தான். மறுநாள் காலையில் அவன் தோட்டத்தில் இருந்த செடி கொடிகளை ஓடி ஓடித் தொட்டான். என்ன வியப்பு! தேவதை கூறியபடியே அவை பொன்னாக மாறியதைக் கண்டான்; பேரின்பம் கொண்டான். அவன் ஆடினான்; பாடினான்; அங்குமிங்கும் ஓடினான்; வீட்டில் உள்ள பொருள்களையும் தொட்டுப் பார்த்தான். அவையும் பொன்னாக மாறித் 'தகதக'வென ஒளிவீசின.

உச்சிவேளை வந்தது. பெருமாளுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. முதலில் வாய் கொப்புளிக்கத் தண்ணீர் எடுத்தான்; தண்ணீர் பொன்னாயிற்று! மனைவியை அழைத்து உணவு இடச் சொன்னான்.

அவள் இலையில் சோறு இட்டாள். பேராசைக்காரன் இலையில் கை வைத்தான். உணவு முழுவதும் பொன்னாக மாறிவிட்டது; இலையும் பொன் இலையாக மாறியது. தொடத்தொட ஒவ்வொன்றும் பொன்னாக மாறியது. பசியால் வாடிய பெருமாள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

அப்போது அவன் அருமை மகள் ஓடிவந்தாள். அவன் அவளையும் அன்போடு தொட்டான். அவளும் பொற்சிலையாக மாறிவிட்டாள். பெருமாளின் மனம் நடுங்கியது. ''ஐயோ! என்ன இது? தொட்ட பொருள் எல்லாம் பொன்னாக மாறுகின்றனவே! பசியோடு இருப்பவன் பொன்னைத் தின்ன முடியுமா? பசி வேளைக்கு வயிறாரச் சோறு கிடைத்தால் போதுமே!'' என்று அலறி அழுதான்.

இரண்டு நாள்கள் சென்றன. பெருமாள் சோறும் நீரும் இல்லாமல் வருந்தினான். ''தெய்வமே! நான் பேராசையால் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். இந்தப் பாழான பொன்னாசை எனக்கு வேண்டவே வேண்டா!'' என்று வேண்டினான்.

அன்று இரவு தேவதை அவன் கனவில் தோன்றியது; ''இப்போது உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டது. பெருமாள், ''தேவதையே! பசியால் என் உயிர் போய்விடும்போல் இருக்கிறது. ஒரு பிடிச் சோறு கிடைத்தால் போதும்'' என்றான்.

தேவதை அவனை நோக்கி, ''அன்பனே! உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் நமக்குப் பயன்படுபவை. நீ பொன்னையே பெரிதாக மதித்துப் பேராசை கொண்டாய். உள்ளதைக்கொண்டு அமைதியாக வாழ்வதே நல்லது. செல்வத்தைப் பெற்றவர் உண்டு, உடுத்து, நல்லவழியில் செலவிட்டு வாழ்வதே சிறப்பான வாழ்க்கை. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா? இனி, எல்லாப் பொருள்களும் பழைய நிலையை அடைய வரம் அளிக்கிறேன்'' என்று கூறி மறைந்தது.

தேவதை கூறியபடியே எல்லாப் பொருள்களும் முன்போல ஆயின. பெருமாளின் மகளும் உயிர்பெற்றுத் தந்தையைத் தழுவிக்கொண்டாள். பெருமாளின் பேராசை நீங்கிவிட்டது. அவன் உள்ளதைக்கொண்டு அமைதியாக வாழ்ந்துவந்தான்.

''பேராசை பேரிழப்பு.''
—பழமொழி

# 11. மனக் குரல்!

கண்ணன் ஓர் ஏழைச் சிறுவன். அவன் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வகுப்பு ஆசிரியர் மாமல்லபுரத்துக்குச் சுற்றுலாச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக வகுப்பில் அறிவித்தார். சுற்றுலாவில் கலந்துகொள்ள விரும்பும் மாணவன் ஒவ்வொருவனும் இருபது ரூபா கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் கூறினார்.

மறுநாள் பிள்ளைகள் 'நான் முந்தி; நீ முந்தி' என்று சுற்றுலாக் கட்டணத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள். கண்ணன் மட்டும் பணம் கட்டவில்லை. ஆனால், மாமல்லபுரம் சென்று கடற்கரையையும் அங்குள்ள அழகான சிற்பங்களையும் காணவேண்டுமென்று ஆவலோடு இருந்தான்.

ஒரு நாள் அவன் வகுப்பில் படிக்கும் வள்ளியும் பாரியும் அவனைப் பார்த்து, ''கண்ணா, நீ சுற்றுலாவுக்கு வரவில்லையா? நாங்கள் சுற்றுலாக் கட்டணம் இருபது ரூபாவும் நேற்றே கட்டிவிட்டோம்'' என்றனர்.

கண்ணன், ''பாரி! வள்ளி! என் தந்தையார் சென்ற ஆண்டில்தான் இறந்தார். என் தாயாரோ கூலிவேலை செய்து என்னையும் என் தங்கையையும் படிக்க வைக்கிறார். சுற்றுலாச் செல்வதற்கு எங்களிடம் பணம் ஏது?'' என்று ஏக்கத்துடன் கூறினான்.

வள்ளி அவன்மீது இரக்கம் கொண்டு ''கண்ணா, நான் சிறுசேமிப்பில் சேர்த்த பணம் ஐந்து ரூபா இருக்கிறது. அதை உனக்குத் தருகிறேன்'' என்றாள்.

பாரியும் கண்ணனை நோக்கி, ''என்னிடமும் ஐந்து ரூபா இருக்கிறது. அதை உனக்குக் கொடுக்கிறேன்'' என்றான்.

''இன்னும் பத்து ரூபா வேண்டுமே! எங்கே போவது?'' என்று கண்ணன் வருத்தத்துடன் கூறினான்.

''அதற்கென்ன கவலைப்படாதே. நம் வகுப்பில் படிக்கும் மணவாளன் பணக்காரச் சிறுவன்; இரக்கக் குணமுள்ளவன். உனக்காக அவனிடம் சென்று இன்னும் பத்து ரூபா வாங்கித் தருவேன். நீயும் எங்களுடன் சுற்றுலாவுக்கு வந்தால் எங்களுக்கு இன்பமாக இருக்கும்'' என்றான் பாரி,

கண்ணன் இருவருக்கும் நன்றி கூறி வீடு சென்றான். அவன் மணவாளனிடமிருந்து வாங்கி வந்த கணக்குப் புத்தகத்தைப் பார்த்துக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான். அந்தப் புத்தகத்தின் ஒரு பக்கத்தில் பத்து ரூபா நோட்டுக் காணப்பட்டது. கண்ணன் அதைக் கண்டு வியப்படைந்தான். தனக்கு வேண்டிய பொருள் தானாகவே தன் கைக்கு வந்து சிக்கிக் கொண்டதை எண்ணி எண்ணி இன்பம் அடைந்தான்.

ஆனால், அந்தப் பத்து ரூபாவை எடுத்துக்கொள்ள அவனது மனம் தடுத்தது.

'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா? அன்னமிட்ட வீட்டிலே கன்னமிடப் பார்க்கிறாயா?' என்று அவனது மனச்சான்று தடுத்தது.

''அன்னமாவது! கன்னமாவது! இப்போது எனக்குப் பத்து ரூபா கிடைத்துவிட்டது. எனது சுற்றுப் பயணம் வெற்றிப் பயணந்தான்'' என்றான் கண்ணன்.

அதற்கு மனச்சான்று, ''வேண்டா கண்ணா, இந்த வீண் ஆசை. இந்தப் பணத்தை மணவாளனிடமே கொடுத்துவிடு, அவனையே கேட்டால் உனக்குப் பத்து ரூபா கொடுப்பான்'' என்றது.

''அவன் முடியாது என்று சொல்லிவிட்டால்.....''

''சுற்றுப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடு.''

''அதெல்லாம் முடியாது. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவாருண்டோ? இந்தப் பத்து ரூபாவை நானே வைத்துக் கொண்டு கணக்குப் புத்தகத்தை மட்டும் மணவாளனிடம் திருப்பிக் கொடுத்து விடுவேன்.''

''மணவாளன் பத்து ரூபா நோட்டு எங்கே என்றால்...?''

''எனக்குத் தெரியாது என்று சொல்லிக் கணக்குப் புத்தகத்தை மட்டும் அவனிடம் கொடுத்துவிடுவேன்.''

இவ்வாறு கண்ணனும் அவனது மனச்சான்றும் போராடிய பின்னர், அவன் பத்து ரூபா நோட்டைத் தன்னிடம் வைத்துக்கொண்டு கணக்குப் புத்தகத்தை மட்டும் மணவாளனிடம் கொடுத்துவிட்டான்.

கணக்குப் புத்தகத்தை வாங்கிய மணவாளன், அதில் மறதியாக வைத்திருந்த பத்து ரூபா நோட்டைக் காணாமல் திகைத்தான்; தன் தம்பி, தங்கையருள் எவரேனும் அந்தப் பணத்தை எடுத்திருக்கவேண்டும் என்று எண்ணினான். உடனே தன் தம்பி வேலனையும் தங்கை பாவையையும்

அழைத்து, ''இந்தக் கணக்குப் புத்தகத்தில் வைத்திருந்த பத்து ரூபா நோட்டை நீங்களே எடுத்திருக்கவேண்டும்? மரியாதையாகக் கொடுத்து விடுங்கள்'' என்று அதட்டினான்.

வேலன், ''அண்ணா, வீணாக என்மீது பழிபோடாதே! உன் பணத்தை நான் எடுப்பேனா?'' என்றான்.

பாவை, ''கணக்குப் புத்தகத்தைக் கண்ணனிடம் கொடுத்துவிட்டு எங்களுக்குத் திருட்டுப் பட்டம் கட்டப் பார்க்கிறாயா? ஒருவேளை அவன் அந்தப் பத்து ரூபாவை எடுத்திருக்கலாமே?'' என்றாள்.

அதுகேட்ட மணவாளன் ''சீ! வாயை மூடு. கண்ணன் என் உண்மை நண்பன். அவன் பிறர் பொருளுக்கு ஆசைப்படாத உத்தமன். அவன் ஒருகாலும் எடுத்திருக்கமாட்டான். இது உங்களுள் ஒருவரின் வேலை யாகத்தான் இருக்க வேண்டும்'' என்றான்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது கண்ணன் அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தான். மணவாளன் அவனைக் கண்டு,''வா, கண்ணா! உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்றான்.

''என்னைப் பற்றியா? என்ன பேசிக்கொண்டீர்கள்?'' என்று கேட்டான் கண்ணன்.

உனக்காக என் கணக்குப் புத்தகத்தில் கணக்காகப் பத்து ரூபா வைத்திருந்தேன். நீயும் எங்களுடன் சுற்றுலா வருவதற்கு உனக்குத் தருவதற்காகவே அந்தப் பணத்தை வைத்திருந்தேன். எவரோ அந்தப் பணத்தைத் திருடிக்கொண்டார்? இப்போது என்ன செய்வது?'' என்று வருத்தத்துடன் கூறினான்.

மணவாளனின் சொல்லைக் கேட்ட கண்ணன் நெஞ்சம் பதறியது; கண்கள் கலங்கின. அவன் மணவாளனைப் பார்த்து, ''உற்றவிடத்து உதவும் உத்தம நண்பனே! என்னை மன்னிக்கவேண்டும். அந்தப் பத்து ரூபா நோட்டைத் திருடியவன் நானே! உன்னுடைய அன்பு உள்ளத்தைத் தெரிந்திருந்தும் தவறு செய்தேன். என்னை மன்னித்துவிடு'' என்று கண்ணீர் ததும்ப வேண்டினான்.

மணவாளன், ''கண்ணா! உனக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த பணத்தை நீயே எடுத்துக்கொண்டாய். இதில் தவறு ஒன்றும் இல்லை. வருத்தப்படாதே'' என்று கூறி அவனது கண்ணீரைத் துடைத்தான்.

வேலனும் பாவையும் கண்ணனைப் பார்த்து, ''கண்ணா! நீயும் எங்கள் அண்ணனுடன் சுற்றுலாவில் கலந்துகொள்வதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி' என்றார்கள்.

கண்ணன் அவர்களுக்கு நன்றி கூறிச் சுற்றுலாவில் கலந்துகொண்டு இன்பம் அடைந்தான்.

''நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.''

—கொன்றைவேந்தன்

''தன்னெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.''

—திருக்குறள்

# 12. ஆபுத்திரன்

வயனங்கோடு என்னும் சிற்றூரில் இளம்பூதி என்னும் மறையவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருக்குப் பல ஆண்டுகளாகப் பிள்ளைப் பேறு இல்லை. ஒரு சமயம் அவர் குமரி முனையில் நீராடித் திரும்பினார். வழியில் ஒரு தோட்டத்தில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. அதுகேட்ட மறையவர் ஒலிவந்த பக்கமாக நடந்தார். அங்கே ஓர் ஆண் குழந்தை தாயில்லாமல் பசி மிகுதியால் அழுதுகொண்டிருந்தது.

குழந்தையின் அழுகுரலைக் கேட்டு ஒரு பசு வந்தது. அந்தப் பசு என்ன செய்தது தெரியுமா? குழந்தையின் துயரத்தைப் போக்கத் தன் நாவினால் நக்கித் தடவிக்கொடுத்தது; தன் பாலையும் அதற்கு ஊட்டியது. மறையவர் அந்தக் காட்சியைக் கண்டு மனம் உருகினார்; அந்த குழந்தையை வாரியெடுத்து அணைத்துக்கொண்டார்; ஏழைக்குப் புதையல் கிடைத்தது போல இன்பம் கொண்டார். அவர் குழந்தையைத் தமது இல்லத்துக்கு எடுத்துச்சென்று தம் மனைவியிடம் கொடுத்தார். இருவரும் அந்தக் குழந்தையைச் செல்வமாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள்.

வேதியர் அந்தக் குழந்தைக்குப் பசுவின் மகன் என்னும் பொருள் அமைந்த ‘ஆபுத்திரன்’ என்னும் பெயர் சூட்டினார். ஆபுத்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். இளம்பருவத்தில் கற்பனவற்றைக் கசடறக் கற்று அறிவுச் செல்வனாக விளங்கினான். அன்பு, அடக்கம், இன்சொல், இரக்கம் முதலிய அருங்குணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றான்.

ஒருசமயம் அவ்வூரில் வேள்வி ஒன்று நடைபெற்றது. அந்த வேள்வியில் பலியிடுவதற்காகப் பசு ஒன்றுகட்டப்பட்டிருந்தது. அதனையறிந்த ஆபுத்திரன் பசுவின்மீது இரக்கம்கொண்டு இரவில் யாருக்கும் தெரியாமல் அதனை அவிழ்த்து ஓட்டிக்கொண்டு சென்றான். வேதியர் சிலர் அவன் செயலைக் கண்டித்து அவனை ஊரைவிட்டே துரத்திவிட்டனர்; ஆபுத்திரனை வளர்த்த இளம்பூதியும் அவன்மீது வெறுப்புக் கொண்டார்.

ஆபுத்திரன் என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்தான். அவன் பிச்சை எடுத்து உண்ணும் நிலையை அடைந்தான்; தன் ஊரிலிருந்து புறப்பட்டுத் தென்மதுரைக்குச் சென்றான். அங்குச் சிந்தாதேவி என்னும் கலைமகள் கோயிலை அடைந்தான்; கோயிலின் முன்வாயிலில் உள்ள அம்பலத்தையே தன் இருப்பிடமாகக்கொண்டு வாழ்ந்துவந்தான்.

ஆபுத்திரன் வீடுவீடாகச் சென்று பிச்சையெடுத்து வந்தான்; தான் வாங்கிவந்த உணவைக் குருடர், செவிடர், முடவர், நோயாளிகள், திக்கற்றவர் முதலியோருக்குக் கொடுத்து, மிகுந்ததைத் தான் உண்டுவந்தான். அவன் பிச்சையெடுக்கும் ஓட்டினையே தலையணையாகக் கொண்டு, அந்த அம்பலத்தில் இரவு நேரத்தில் உறங்கினான். இவ்வாறு ஆபுத்திரன் பிறர் பசியைப் போக்கும் பணியில் தனது காலத்தைக் கழித்துவந்தான்.

ஒருநாள் பெருமழை பெய்தது. அப்போது இரவு வேளை. பசியால் வருந்திய சிலர், ஆபுத்திரனை அடைந்து, ''தம்பி! எங்கள் வயிறு காய்கிறது! எங்களுக்கு உணவு ஏதேனும் அளித்துப் பசியைப் போக்கமாட்டாயா?'' என்று வேண்டினர். பாவம்! ஆபுத்திரன் என்ன செய்வான்? இரவு வேளையில் அடைமழையில் எங்கே போய்ப் பிச்சை எடுக்க முடியும்? செய்வது அறியாது சிந்தாதேவியைத் துதித்தான்.

ஆபுத்திரன் படும் துன்பத்தைக் கண்ட சிந்தாதேவி இரக்கம் கொண்டாள்; அவள் அவன் எதிரே தோன்றி அவன் கையில் ஒரு பாத்திரத்தைக் கொடுத்தாள். அவள் அவனை நோக்கி, ''அன்பனே! நாடு முழுதும் வறுமையடைந்தாலும் இந்த ஓடு வறுமையடையாது. இதில் கைவிட்டு எடுக்க எடுக்க உணவு குறையாமல் வளர்ந்துகொண்டே இருக்கும். இந்தப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு நீ ஏழைகளின் பசியை நீக்கலாம்'' என்று கூறி மறைந்தாள்.

அமுதசுரபி என்னும் அந்தப் பாத்திரத்தைப் பெற்ற ஆபுத்திரன் பெருமகிழ்ச்சி அடைந்தான். அவன் அமுதசுரபியைக்கொண்டு தன்னை நாடி வந்தவர்க்கெல்லாம் உணவிட்டான். அவன் இட்ட உணவை மக்கள் வயிறார உண்டார்கள்; வாயார வாழ்த்தினார்கள்.

ஆபுத்திரன் அளிக்கும் உணவைக் கண்டு விலங்குகளும் பறவைகளும்கூட அவனைவிட்டுப் பிரியாமல் சுற்றிக்கொண்டிருந்தன. அவன் இருக்கும் இடத்தில் உயிரினங்களின் ஆரவாரம் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஆபுத்திரனின் கொடைப்பெருமை நாடெல்லாம் பரவியது; அவனது புகழ் இந்திரலோகத்துக்கும் எட்டியது.

இந்திரன் ஆபுத்திரனின் செயலைப் பாராட்டி அவனுக்கு வரமளிக்க விரும்பினான்; அவன் முதியவர் வேடத்தில் ஆபுத்திரனிடம் வந்து சேர்ந்தான். முதியவர் ஆபுத்திரனைப் பார்த்து, ''நான் இந்திரன்; நீ செய்யும் அன்னதானத்தால் பெரும் புகழ் பெற்றாய். உன் புகழ் வானுலகத்திலும் பரவியுள்ளது. நீ விரும்பும் வரத்தைக் கேள்; தருகிறேன்'' என்றான்.

ஆனால், ஆபுத்திரனோ இந்திரனை மதிக்கவில்லை. அவன், வயிறு குலுங்கச் சிரித்தான்; ''ஆற்றல் மிக்க அரசே! பசியால் வருந்தும் மக்களுக்கு வயிறார உணவு அளித்து அவர்களின் இனிய முகத்தைக் கண்டு களிக்கிறேன். இந்த இன்பத்தை அளிக்கும் தெய்வப் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதும்;

வேறு வரம் ஒன்றும் எனக்கு வேண்டா. குருடர்களும் முடவர்களும் எனக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்று கூறி அவ்விடத்தைவிட்டுச் சென்றான்.

இகழ்ச்சியாகப் பேசிய ஆபுத்திரன்மீது இந்திரன் ஆத்திரம்கொண்டான். நாடெங்கும் நல்ல மழை பெய்யுமாறு மேகங்களை ஏவினான். எங்கும் பெருமழை பெய்தது. பயிர்கள் செழித்து வளர்ந்தன. உணவுப் பஞ்சம் ஒழிந்தது. அதனால் ஆபுத்திரனிடம் பிச்சைக்காரர் ஒருவரும் செல்லவில்லை. அவன் அமுதசுரபி வீணாக இருக்கிறதே என்று வருந்தினான். அப்போது சிலர் அவனிடம் வந்து, ''ஆபுத்திரா! கடலுக்கு அப்பால் சாவக நாடு என்று ஓர் இடம் உண்டு. அங்குக் கொடிய பஞ்சத்தால் மக்கள் வாடுகிறார்கள்'' என்று தெரிவித்தனர். அதுகேட்ட அவன் மனம் மகிழ்ந்து, ''இனி, நான் சாவக நாடு செல்வேன்; அங்குள்ள மக்கள் பசியைத் தீர்ப்பேன்'' என்று சொல்லி அந் நாட்டுக்குச் செல்லும் மக்களோடு கப்பலில் ஏறிப் புறப்பட்டான்.

கப்பல், போகும் வழியில் மணிபல்லவம் என்னும் தீவில் தங்கியது. கப்பலில் இருந்தவர்கள் களைப்பாறுவதற்காகக் கப்பலிலிருந்து இறங்கினார்கள்; அந்தத் தீவின் இயற்கை அழகைப் பார்த்துப் பார்த்து இன்பம் அடைந்தார்கள். ஆபுத்திரனும் இறங்கிப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தான். அவன் மீண்டும் வந்து கப்பலில் ஏறுவதற்கு முன்னரே, கப்பலோட்டி அவன் ஏறிவிட்டதாக எண்ணி அம் மரக்கலத்தை வேறு இடத்துக்கு ஓட்டிச் சென்றுவிட்டான்.

ஆபுத்திரன் மரக்கலத்தைக் காணாமல் கண்கலங்கினான்; உடன் வந்தவரையும் காணாமல் திகைத்தான். மணிபல்லவம் மனிதர் நடமாட்டம் இல்லாத இடம். ஆகையால், அவன் ''பலருக்கும் உணவளிக்கும் இந்தப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு நான் மட்டும் வாழ்வதில் பயனில்லை'' என்று எண்ணினான். பிறகு அவன் அப் பாத்திரத்தைத் தொழுது, ''ஆருயிரின் மருந்தாகிய அமுதசுரபியே! பசியால் வாடும் உயிர்களுக்காக மனம் இரங்கும் அருள் உள்ளம் கொண்ட நல்லவர் எவரேனும் இங்கே வருவாரானால் நீ அவர் கையில் சென்று சேர்வாயாக!'' என்று கூறி அத் தீவில் இருந்த கோமுகி என்னும் குளத்தில் அதனை எறிந்தான். பின்னர் உண்ணாநோன்பிருந்து அங்கேயே உயிர்துறந்தான்.

''மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங்கு இல்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா(து) அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.'' —நல்வழி

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.''— புறநானூறு

''ஐயம் புகினும் செய்வன செய்.'' —கொன்றைவேந்தன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

அச்சிட்டோர்: பூர்ணமாலா பிராஸ்ஸ், சிவகாசி - 626 123